நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாறு**

நாள் - 11 .12.2023 - CC.131 /2010 அ.சா.1 கோபாலகிருஷ்ணன் ,
த-பெ.சீனிவாசன்

எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ........

**1)** புகார் அளிக்கப்பட்ட இடம் புகார் கொடுத்தபோது என்னுடைய அனுபோகத்தில் இருந்தது, 2011ல் அந்த இடத்தை விற்பனை செய்துவிட்டேன். OS.85/2008 வழக்கானது இந்த வழக்கு கொடுக்கப்படுவதற்கு முன்பாக போடப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகள் 1, 2 ஆகியோர்கள் 3ஆம் எதிரிக்கு அனுபோக சான்று வழங்கியது தொடர்பாக இந்த புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 3ஆம் எதிரிக்கு 1,2 எதிரிகள் வழங்கியதை நேரடியாக பார்த்தீர்களா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் காட்டியபோது பார்த்தேன். புகார் கொடுப்பதற்கு முன்பாக 1, 2 எதிரிகள் 3ஆம் எதிரிக்கு சான்று வழங்கிய விபரம் தெரியாது என்றால் சரிதான். நான் அனுமானத்தின் அடிப்படையில்தான் இந்த புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

2) மேற்படி இடத்தை 3ஆம் எதிரி சாகுபடி செய்ததால்தான் அனுபோக சான்று வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பின்பு விசாரணையில்தான் ஜெராக்ஸ் நகலை காவல்நிலையத்தில் காண்பித்தார்கள் என்றால் சரிதான். காவல் அதிகாரி காட்டினார், அவருடைய பெயர் எனக்கு தெரியாது. அவருக்கு யார் கொடுத்தார்கள் என்றால் ஜெயராமனும், மனோகரனும் கொடுத்தாக சொன்னார். உடனடியாக அந்த காவல் அதிகாரி வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கானது ஜெராக்ஸ் நகலை வைத்துதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) 1, 2 எதிரிகள் 3ஆம் எதிரிக்கு கொடுத்த சான்றிதழில் பக்கத்தில் இருந்தவர்களிடம் விசாரணை செய்துதான் மேற்படி சான்று வழங்க ப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சான்றிதழ் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. மேற்கண்ட ஆவணங்களை போலிசார் எவ்வாறு கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது. 1, 2 எதிரிகள் கொடுத்த சான்றிதழ் உண்மையானதுதான் என்று வட்டாட்சியர் காவல் ஆய்வாளரிடம் கூறிய விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. ஒரு புல எண் ஒருவருக்கு சொந்தமாக இருந்தாலும், அந்த நிலத்தை வேறு ஒரு நபர் அனுபோக சாகுபடி செய்தால் அனுபோக சான்று வழங்குவதுதான் சட்டரீதியானது என்றால் சரியல்ல.

4) அதன் அடிப்படையில்தான் 3ஆம் எதிரி மேற்படி நிலத்தை தொடர்ந்து சாகுபடி செய்து வந்ததால் அருகாமையில் இருந்த நபர்களை விசாரித்து 1,2 எதிரிகள் சட்டத்திற்கு உட்பட்டு சான்று வழங்கினார்கள் என்றால் சரியல்ல. நில உரிமையாளர் ஒருவராக இருந்தபோதிலும் சாகுபடி செய்பவர்களுக்கே பயிர் காப்பீடு போன்ற சலுகைகள் வழங்கப்படும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் நிலம் சாகுபடி செய்கிறீர்களா என்றால் இல்லை. அதனால்தான் பயிர் காப்பீடு விபரங்கள்

தெரியவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்வதற்கு முன்பாக அரசு குற்றவியல் வழக்கறிஞரிடம் ஒப்புதல் வாங்கினீர்களா என்றால் ஞாபகம் இல்லை.

5) அரசு குற்றவியல் வழக்கறிஞர், குற்றவியல் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்று கருத்துரை கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை. பல நீதிமன்றங்களில் 3 ஆம் எதிரிக்கு எதிராக தீர்ப்பு கொடுக்கப்பட்டிருந்த போதும் அவர்மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது மேற்படி வழக்கு தொடர்பான இடம் பிளாட் போடுவதற்காக மண் நிரப்பப்பட்ட நிலையில் கடந்த 10 ஆண்டுகளாக அப்படியே உள்ளது என்றால் சரிதான். 2006 ஆம் ஆண்டு எனது அம்மா எனக்கு கொடுத்த விலையை காட்டிலும் குறைவான விலைக்கு எதன் அடிப்படையில் 5 ஆண்டுகள் கழித்து கொடுத்தீர்கள் என்றால் எனக்கு பணம் தேவைபட்டதால் கொடுத்தேன். இந்த இடம் சம்மந்தமாக மற்ற சகோதரர்களுக்கு பங்கு கொடுத்தீர்களா என்றால் வேறு சொத்துக்களில் கொடுத்தால் இந்த சொத்தில் கொடுக்கவில்லை.

6) மேற்படி தகவலை OS.85/2008 வழக்கில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. மேற்படி வழக்கானது இன்று வரை நிலுவையில் இருந்து வருகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக நிலத்தின் பாகஸ்தர்களை போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு குறித்து OS.85/2008 வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு தாக்கல் செய்து 15 ஆண்டுகள் ஆகிவிட்டது. இந்த 15 ஆண்டுகளிலும் பதிலுரை தாக்கல் செய்யாமல் இருந்து வருகிறது என்றால் நிறைய நபர்கள் பார்ட்டியாக இருப்பதால் அதனால் பதிலுரை தாக்கல் செய்யவில்லை.

7) 1, 2 எதிரிகள் 3 ஆம் எதிரிக்குஉண்மைக்கு புறம்பாக சான்று வழங்கப்பட்டது சம்மந்தமாக வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் ஆகியவர்களுக்கு நேரடியாகவும், தபால்மூலமாகவும் அனுப்பி உள்ளேன். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் சொல்வதுபோன்று 3 ஆம் எதிரிதான் பயிர் சாகுடியும், வெற்றிலை கொடி சாகுபடியும் செய்து வந்தார் என்றும், அதன் அடிப்படையில்தான் 1,2 எதிரிகள் சான்று வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. 3 ஆம் எதிரி சாகுபடி செய்ததால்தான் 1,2 எதிரிகள் சான்று வழங்கினார்கள் என்றும், 3 ஆம் எதிரியிடமிருந்து நிலத்தை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் 3 ஆம் நபரின் தூண்டுகோளின் அடிப்படையில் இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) அதனால்தான் மேற்கண்ட சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்தில் நான் முதல் முறையாக புகார் அளித்தபோது காவல்நிலையத்தினர் வழக்கை எடுத்துகொள்ளாமல் வழக்கை மறுத்துவிட்டனர் என்றால் சரியல்ல. அதனால்தான் குவிமுச 156 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்து பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலரால் வழஙகப்பட்டதாக சொல்லப்படுகின்ற சான்றுகள் ஜெராக்ஸ் நகலை யாரிடமிருந்து பெற்று வேறு வழியில்லாமல் போலிசார் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,

நீதித்துறை நடுவர், திருவையாறு)